# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC- 68 of 2024

## வழக்கு சாட்சி:PW - 7

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | நந்தினி | தேதி : | 21.02.2025 |
| கணவர் பெயர்: | போஸ் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 21.02.2025.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் பணியில் இருந்த போது 10.04.2022 அன்று காலை 8.45 மணிக்கு அருமநேரி கூந்தன்குளத்தை சேர்ந்த 45 வயது உடைய தங்கராஜ் என்பவரின் மகன் பொன் ராஜ் பொன் செல்வி என்பவரால் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் அரிவாளால் தன்னுடைய வீட்டில் வைத்து அன்றைய தினம் 10.04.2022 காலை 7.1/2 மணியளவில் தாக்கியதாக தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்த போது கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டது.

காயம் - 1 – சிதைந்த காயம் 4 x 3 x 1 செ.மீட்டர் இடது முன் கையில் காணப்பட்டது.

காயம் 2 – சிதைந்த காயம் 3 x 3 x2 செ.மீட்டர் இடது இடுப்பில் காணப்பட்டது.

காயம் 3 - சிதைந்த காயம் 3 x 1 x 1 செ.மீ இடது பக்க தலையில் காணப்பட்டது.

காயம் 4 – சிதைந்த காயம் 2 x 1 x 1 செ.மீட்டர் வலது தோள் பட்டையில் காணப்பட்டது.

அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை மேல் சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்தேன். அவர் 10.04.2022 முதல் 30.04.2022 வரை உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போது அவருக்கு சிடி ஜெஸ்ட், எக்ஸ் ரே ஆகியவை எடுக்கப்பட்டது. எக்ஸ்ரே வில் அவருக்கு இடது பக்க இடுப்பு பகுதியில் இடுப்பு எலும்பு முறிவு காணப்பட்டது. அதற்கு அவருக்கு எலும்பு முறிவு மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் மேற்கண்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று அளித்தேன். IP No.29230 என்பதாகும். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு என்னால் வழங்கப்பட்டதுதான். அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ-10 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். ஒரு நபர் அரிவாளால் தாக்கினால் மேற்படி 1 முதல் 4 வரையிலான காயங்கள் ஏற்படக்கூடுமா என்றால் ஏற்படக்கூடும்.

**குறுக்கு விசாரணை** :

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.